# சங்க இலக்கியங்களில் மருத்துவச் சிந்தனைகள்

**ச.வித்யாகுமாரி[1] & முனைவர் எ.பச்சையப்பன்[2]**
**[1]முனைவர் பட்ட ஆய்வாளர் & [2]இணைப் பேராசிரியர்**
**தமிழ்த்துறை, மொழிகள் புலம்,**
**வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,**
**சென்னை -600 117. svidhyakumari1983@gmail.com**

17

**ஆய்வுச் சுருக்கம் :**

தற்போதைய காலகட்டம் நமது உடல் மீதான அக்கறையை அதிகரித்துள்ளதோடு, பாரம்பரிய உணவு மற்றும் பாரம்பரிய மருத்துவம் மீதான நமது கவனத்தை ஈர்த்துள்ளது. தமிழில் இன்று கிடைக்கின்ற நூல்களுள் முதல் நூல் தொல்காப்பியத்தில் உலகத்தின் தோற்றம், உயிர்களின் வகைப்பாடு, வாழ்க்கை முறை, உலகப் பொருள்கள், அவற்றின் செயல்கள், மனித வாழ்க்கை முறைகள்,மெய்ப்பாடுகள் ஆகியவற்றின் மூலம் மருத்துவ நிலையை அறியலாம். மருந்தின் பயனை உணர்ந்திருந்த சங்க கால இலக்கியப் புலவர்கள், தாங்கள் இயற்றிய நூல்களுக்கு மருந்தின் பெயரை சூட்டி மகிழ்ந்துள்ளனர். அவ்வாறு அமைந்த நூல்கள் திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம் ஆகிய மூன்று நூல்கள் ஆகும். மருந்து பொருளின் பெயரால் அமைந்த புலவர்கள் பெயரும் குறிப்பிடத்தக்கது. மரபு சார்ந்த மருத்துவ அறிவினையும் தொழில்நுட்பங்களையும் மீட்டுருவாக்கம் செய்தல் என்பது தற்போது கட்டாய தேவை ஆகின்றது.அந்த வகையில் பழந்தமிழகத்தில் தோன்றிய படைப்புகளில் மருத்துவம் சார்ந்த சிந்தனைகள் வெளிப்பட்ட விதம் குறித்து பழந்தமிழ் நூல்களின் வழி காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:**

**மருத்துவம், இலக்கியம், தொல்காப்பியம் பழந்தமிழ், சங்க இலக்கியங்கள்.**

**முன்னுரை :**

உலக நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு வரலாறு உண்டு. பண்டைக் காலத்தில் தமக்கென தமிழர்கள் வரலாற்றுக் குறிப்புகளை விட்டுச் செல்லவில்லை எனினும் அவர்களுடைய வாழ்க்கைகளைப் பற்றிய புதைபொருள் சின்னங்கள், இலக்கிய குறிப்புகள் என்பன மிகுதியாகவே நமக்கு கிடைத்துள்ளன.

அவற்றைக் கொண்டு வரலாற்று ஆய்வறிஞர்கள் தமிழக வரலாற்றை வரலாற்றுக்கு முற்பட்ட காலம், சங்க காலம், பல்லவர் காலம், சோழர் காலம், பாண்டியர் காலம்,பிற்காலம் எனப் பாகுபடுத்தினார். அவற்றுள் சங்க காலத்து மக்களின் வாழ்க்கை முறைகளையும், பண்பாடுகளையும் அறிந்து கொள்வதற்குச் சங்க இலக்கியங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

தமிழ்நாட்டின் இயற்கைச் சூழலிலே தமிழர் பண்பாட்டில் வளர்ந்த மருத்துவக் கலையே சித்த மருத்துவம். அதனாலேயே இதற்குத் தமிழ் மருத்துவம் என்ற பெயரும் வழங்கலாயிற்று .

**இயற்கை இலக்கியம்** :

மனிதனின் மொழிப் புலமையின் விளைவே இலக்கியம். அது போன்று மனித இனத்தின் பகுத்தறிவிற்கு இயற்கை அளித்த பரிசே மருத்துவம். விலங்குகளும் தம்பிணி போக்க இயற்கை மூலிகைகளை நாடுவது இயல்பான செயலாகக் கருதப்படுகின்றது. இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதர்களும் தத்தம் பகுத்தறிவைக் கொண்டு இயற்கையைப் பயன்படுத்தி மருந்துகளையும் அறிந்து கொண்டனர். இந்திய மருத்துவக் கலைகள் இறைவனிடம் இருந்து பெறப்பட்டன என்பதையே சித்த மருத்துவமும் கூறுகின்றது. இயற்கையைப் பெரிதும் போற்றினர். அதனால் அவற்றை இயற்கை இலக்கியம் என்று வழங்குவர். எனவே தமிழ் மக்களுக்கு இயற்கை அளித்த செல்வங்களுள் இலக்கியமும், சித்த மருத்துவமும் மிகப் பழமை வாய்ந்தனவாகும். தமிழ் மருத்துவத்திற்கு பயன்படும் ஒவ்வொரு மருந்தும், ஒவ்வொரு குணப் பண்பினைக் கொண்டது. அத்தகைய மருந்துப் பொருட்களை ஒன்று சேர்த்து உபயோகிக்கும் போது அவை அனைத்தும் நேர்வினைப் பொருள்களாகவே இருந்து, எதிர்வினை கொள்ளாமல் நற்பயனை அளித்துள்ளது மூலம் அக்கால மக்களின் தாவரவியல் அறிவும் அவற்றைப் பாங்குறப் பயன்படுத்தி மருந்துப் பொருட்களாக பயன்படுத்தியமையும் புலனாகின்றது.

**தொல்காப்பியம் :**

தமிழ் இலக்கண, இலக்கிய ஆராய்ச்சிகளின் முதல் நூலும் தொன்மையான இலக்கண நூலாகவும் கருதப்படுவது தொல்காப்பியம். அகத்தியரின் மாணவர் தொல்காப்பியர் எனக் கூறப்படுகிறது. எனவே தொல்காப்பியர் சித்த வைத்திய செய்திகள் அறிந்தவர் என்பதில் ஐயமில்லை.' தொல்காப்பியத்தில் பல நூற்பாக்களில்' என்ப' 'மொழிப' 'என்மனார் புலவர்' என்று கூறுவதன் மூலம் தொல்காப்பியத்திற்கு முன்பு இலக்கண நூல்கள் வழங்கி வந்திருக்க வேண்டும் என்றும் அவ்விலக்கணங்கள் தோன்றுவதற்குக் காரணமாக உயர்வாக இலக்கியங்கள் தமிழ் மொழியில் பெருகியிருக்க வேண்டும் என்று கொள்வதும் பொருத்தமாகும்' என்று கே.கே. பிள்ளை கூறுகிறார். தொல்காப்பியம் விளக்க முறையில் அமைந்த இலக்கண நூலாகும். மரபு வழியில் அமைந்த இலக்கண நூலாய் இருப்பினும், அறிவியல் நெறியில் இலக்கணம் சொல்லும் மொழியியல் இலக்கணம் போலவும் விளங்குகின்றது. தமிழில் பிழைகள் தோன்றாதவாறு காக்கும் காப்பரணாகவும் உள்ளது. தமிழ் மொழியின் இலக்கணத்தை மட்டும் அல்லாது தமிழில் தோன்றும் இலக்கியங்களின் இலக்கணத்தை அது எடுத்துரைக்கிறது.

சித்த வைத்தியர்கள் ஓர் அறிவு முதல் ஆறறிவு உயிர்கள் வரை வகைப்படுத்தி அறிந்திருந்தனர். புவியின் அமைப்பைப் பற்றி கூறிய தொல்காப்பியர் புவியில் தோன்றிய உயிரினங்களையும் வகைப்படுத்தி கூறியுள்ளார்.

" ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனோடு நாவே
மூன்றறி வதுவே அவற்றோடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றோடு கண்ணே

ஐந்தறி வதுவே அவற்றோடு செவியே
ஆறறி வதுவே அவற்றோடு மனனே "

(தொல்.மரபியல்:33 )

என்று புலன்களின் மூலம் உயிரினங்களை வகைப்படுத்தியமை, சித்த மருத்துவத்தில் உயிரியல் கொள்கையோடு ஒத்துள்ளது என்பது புலனாகின்றது.

தொல்காப்பிய மரபியலிலே விலங்குகள், செடிகள் ஆகியவற்றின் இளமைப்பருவப்பெயர்கள், விவரமாகக் கூறப்படுகின்றமையை நோக்கும்போது அக்காலத்தில் விலங்குகள், தாவரங்கள் பற்றிய நுண்ணறிவும் அதனை ஒட்டிய மொழி வளர்ச்சியும் சிறந்து இருந்தமை புலப்படுகிறது. மேலும் விலங்கியல், தாவரவியல் பற்றிய சிந்தனைகள் தொல்காப்பிய மரபியலில் உள்ள நூற்பாக்களின் மூலம் வெளிப்படுகின்றன. மருத்துவர்கள் விலங்குகளின் இறைச்சி, ரத்தம், பால், கொம்பு முதலான பொருட்களைச் சிகிச்சைக்காகப் பயன்படுத்தும் போது குறிப்பிட்டப் மிருகங்களின் இயல்புகள், அவற்றின் மருத்துவ பயன்கள் என்பன பற்றிய நுட்பமான அறிவினைப் பெற்றிருந்தார்கள்.

**ஐம்பூதக்கோட்பாடு:**

மருத்துவர்கள் மட்டுமின்றி சங்க புலவர்களும் நிலம், நெருப்பு, காற்று, நீர், ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களும் கலந்த புவியின் அமைப்புகளை அறிந்து செயல்பட்டு இருக்கிறார்கள். மனித உடம்பு ஐம்பூதங்களால் ஆக்கப்பட்ட பிண்டம் என்பது அவர்கள் கோட்பாடாகும். இவை பிற்காலத்தில் சித்தர்களால் போற்றப்பட்ட சித்த மருத்துவத்தின் ஐம்பூதக்கொள்கையோடு ஒத்திருத்தலையும் அறிய முடிகின்றது. இதனை

" மண்டிணிந்த நிலனும் நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும் வளிதலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு ஐம்பெரும்
பூதத் தியற்கை போல" -(புறம்-2:1-6)

என்ற புறநானூற்று பாடல் வரிகள் விளக்குகின்றன.

உடலியங்கியல்:

புலன்களின் மூலம் உயிரினங்களை வகைப்படுத்திய தொல்காப்பியர் எழுத்துக்களின் சிறப்பைப் பற்றி விவரிக்கும் போதுப் மனிதனின் மூச்சுக்காற்றானது எவ்வாறு உடலில் சுழன்று செயல்படுகின்றது என்பதை விளக்குகின்றார்.

"உந்தி முதலா முந்து வளி தோன்றி
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான
உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லும் காலை

பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல

திறம்படத் தெரியும் காட்சியான"

(தொல்.எழுத்து:83)

என்று எழுத்துக்களின் பிறப்பைப் பற்றி விவரிக்கும் தொல்காப்பியர் உடலில் காற்று செயல்படும் விதத்தைக் கூறியுள்ளமை வியக்கத்தக்கதாகும். பஞ்சபூதங்களில் ஒன்றான காற்று நம் உடலில் செயல்படுவது அண்டமும் பிண்டமும் ஒன்றே என்னும் சித்தர் கூற்றை உணர்த்துகின்றது.

எண் வகை மெய்ப்பாடு :

பண்டைய மாந்தரின் உளவியலை எண்வகை மெய்ப்பாடுகளாகக் கூறிய மாந்தர்களுக்கு ஏற்படும் இன்னல்களை மிக நுட்பமாக உணர்ந்து மன வருத்தத்தினை

'நோய் மிகப் பெருகித் தன் னெஞ்சு கலுழ்த் தோளை'

( தொல்.அகத்திணையியல்:39)

நோய் எனவும்

'மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு

யாப்புற வந்த இளிவரல் நான்கே '

( தொல்:மெய்ப்பாட்டியல்:250 )

என்று உடல் வருத்தத்தினைப் பிணி எனவும் குறிப்பதை அறியலாம். மாந்தர் அகத்தே தோன்றும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த கண் முதலிய உறுப்புகள் துணையாகின்றன.

" நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று

அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"

( தொல்:மெய்ப்பாட்டியல்:247)

ஆழ்மனதில் ஏற்படும் மாற்றமே மன நோய் அல்லது உளநோய் எனப்படுகின்றது. மனம் என்பது உடலைக் காக்க எத்தகைய பங்காற்றுகின்றது என்பது தெளிவாகின்றது.

மருத்துவர்:

சங்க இலக்கியங்கள், மருத்துவ முறைகள் குறித்தும், மருந்து பொருட்கள் குறித்தும் மருத்துவன் இயல்பு குறித்தும் குறிப்பிடுகின்றன. அக்காலத்தில் மருத்துவர்,' அறவோன்'(நற்றிணை136), மருத்தன், மருத்துவன்(கலித்தொகை17:20-21) என்று பல இடங்களில் மருத்துவர் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியர் நோய் மருந்து அறிஞர்'(தொல்காப்பியம் : அகத்திணையியல்192) என்று குறிப்பால் சுட்டுகிறார். கற்றான் என்பது நோயினை தீர்க்கும் மருத்துவ அறிவு பெற்றவன் என்பதைக் குறிக்கும். மருத்துவர் என்பவர் நோயுற்றவர் வேட்கை கொள்ளும் அனைத்தையும் வழங்காமல், நோயின் தன்மைக்கு ஏற்ப மருந்துகளை ஆய்ந்து கொடுத்து நோயினைக் குணப்படுத்தும் தன்மை வாய்ந்தவராக இருந்ததை

'அரும் பிணி உறுநர்க்கு வேட்டது கொடா அது

மருந்து ஆய்ந்துகொடுத்த அறவோன் போல'

(நற்.136: 2-3)

என்பதன் மூலம் அக்கால மக்கள் மருத்துவனை'அறவோன்' எனப் போற்றிப் பாராட்டும் பண்பைப் பெற்றிருந்தனர் என்பதை அறியலாம்.

மருத்துவன்- நோயாளி உறவு முறை:

"வாளாள் அறுத்து சுடினும் மருத்துவன்பால்
மாறாத காதல் நோயாளன் போல்"

தனக்கு வந்த உற்ற நோயை தீர்க்க நோயாளன் மருத்துவரை நாடி வருகிறான். நோயைத் தீர்க்க மருத்துவன் நோயின் தன்மை கேட்ப பல்வேறு முறைகளை மேற்கொள்வர். அப்போது வாளால் அறுத்து சுட்டு மருத்துவ சிகிச்சை முறையை மேற்கொண்டாலும்; நோயாளிக்கு மருத்துவன் மீதுள்ள ஆழ்ந்த பற்றும் நம்பிக்கையும் குறைவதில்லை. இதுவே நோயாளிக்கும், மருத்துவனுக்கும் இருக்க வேண்டிய உறவு முறையாகும். இதன் மூலம் தமிழகத்தில் "சுடு மருத்துவம்" இருந்தது என்பதும், நோயாளிக்கும் மருத்துவனுக்கும் இருந்த உறவு முறையையும் அறிய முடிகின்றது.

**முடிவுரை:**

மேல் சுட்டிய சான்றுகளின் வழி, பழந்தமிழ் நூல்களின் மூலம் மருத்துவம் சார்ந்த நுண்ணறிவுகள், சிந்தனைகள் பற்றி அறிய முடிகின்றது. இயற்கையையும், இயற்கையோடு இணைந்த பொருள்களையும் பழந்தமிழ் புலவர்கள் எடுத்தாள்வதன் மூலம் மனிதனை நோயிலிருந்து காத்து செம்மைப்படுத்தும் என்று இலக்கியங்களின் மூலம் அறியலாம். காலந்தோறும் பதிவு பெற்றுள்ள இலக்கியச் சான்றுகள் சுவடி குறிப்புகள் நடப்பில் உள்ள தமிழ் மருத்துவ முறைகள் போன்றவற்றை ஒருங்கே தொகுத்து முறைப்படுத்தி தமிழர் மருத்துவ முறைகளை மீட்டுருவாக்கம் செய்தலும் தேவையாகிறது என்பது பெறப்படுகிறது.

**துணைநூற் பட்டியல்:**

1) கே.கே.பிள்ளை,தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்.விஷால் எண்டர்பிரைசஸ்,சென்னை.

2) முனைவர் ப.ஜெயகிருஷ்ணன், தமிழியல் புது நோக்கு, சேகர் பதிப்பகம்,சென்னை

3) அறிவியல் கல்வி - பேரா.கு.அண்ணாதுரை,முத்து பதிப்பகம், விழுப்புரம்.

4) தொல்காப்பியம் எழுத்ததிகாரம், கழக வெளியீடு.

5) தொல்காப்பியம் பொருளதிகாரம், கழக வெளியீடு.